**BSNL ஊழியர் சங்கத்தின் மீது SEWA BSNL தலைவர்களின் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள்**

NFTE சங்கத்திற்கு வாக்களிக்க அதன் நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டு SEWA BSNL ஒரு சுற்றறிக்கையினை விட்டுள்ளது. BSNL ஊழியர் சங்கத்தில் உள்ள SC/ST ஊழியர்கள் அனைவரும் BSNL ஊழியர் சங்கத்திற்குத் தான் வாக்களிப்பார்கள் என்பதால் இந்த சுற்றறிக்கையினைப் பற்றி BSNL ஊழியர் சங்கம் கவலைப்படவில்லை. SEWA BSNL கேட்டுக் கொண்டதன் காரணத்தை மட்டுமே கொண்டு BSNL ஊழியர் சங்கத்தில் உள்ள SC/ST ஊழியர்கள் வேறொரு சங்கத்திற்கு வாக்களிக்க மாட்டார்கள். அதே சமயம் அந்த சங்கம் சுமத்தியிருக்கக் கூடிய சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு BSNL ஊழியர் சங்கம் தனது விளக்கத்தை தர விரும்புகிறது.

1) SC/ST ஊழியர்களுக்கு NEPPயில் இட ஒதுக்கீட்டை BSNL ஊழியர் சங்கம் பெற்றுத் தரவில்லை என குற்றம் சாட்டியுள்ளது. NEPPயில் SC/ST ஊழியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரியிருந்தது. ஆனால் இந்த கோரிக்கையினை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. சேவைக்கால அடிப்படையிலான ஊதிய விகித உயர்விற்கு இட ஒதுக்கீடு தரமுடியாது என்றும், பதவி அடிப்படையிலான பதவி உயர்விற்கு மட்டுமே வழங்க முடியும் என நிர்வாகம் தனது வாதத்தை முன் வைத்தது. சில உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும், சேவைக்கால அடிப்படையிலான ஊதிய விகித உயர்விற்கு இட ஒதுக்கீடு தர வேண்டியதில்லை என்றும், பதவி அடிப்படையிலான பதவி உயர்விற்கு மட்டுமே வழங்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளன. இந்த விஷயம் SEWA BSNL தலைவர்களுக்கும் தெரியும். இதன் காரணமாகவே தனது கடுமையான முயற்சிக்கு பின்னரும் BSNL ஊழியர் சங்கத்தால் SC/ST ஊழியர்களுக்கு NEPPயில் இட ஒதுக்கீடு பெற்றுத் தர இயலவில்லை. ஆனால் SEWA BSNL தலைவர்கள் இந்த உண்மையை SC/ST ஊழியர்களிடம் மறைத்து அவர்களை ஏமாற்றுகின்றனர்.
2) மேலும் SC/ST ஊழியர்களுக்கு OTBP மற்றும் BCR திட்டங்களில் இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்ட போது NFTE சங்கம் தான் அங்கீகரிக்கப்பட்டிருந்த சங்கம். NFTE சங்கம் அன்று அதனை எதிர்க்கவில்லை. ஆனால் BSNL ஊழியர் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட போது OTBP, BCR திட்டங்களில் SC/ST ஊழியர்களுக்கு இட ஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டும் என்று தேசிய கவுன்சில் கூட்டத்தில் பிரச்சனையாக எழுப்பியது. இந்த கோரிக்கைக்காக BSNL ஊழியர் சங்கம் பல போராட்டங்களையும் நடத்தியுள்ளது. எனவே இன்று NFTEயின் தோளில் அமர்ந்துள்ள SEWA BSNL தலைவர்கள், SC/ST ஊழியர்கள் மத்தியில் குழப்பம் உருவாக்கி திசை திருப்ப முயற்சிப்பதை பார்த்தால் சிரிப்பு தான் வருகிறது.
3) SC/ST ஊழியர்களின் பிரச்சனைகளை மிகச்சரியாக எடுக்கும் ஒரே சங்கம் BSNL ஊழியர் சங்கம் மட்டுமே. BSNLல் உள்ள SC/ST காலிப்பணியிடங்களை நிரப்பக் கோரி BSNL ஊழியர் சங்கம் பலமுறை பிரச்சனையினை கையிலெடுத்த காரணத்தால் பல காலிப் பணியிடங்கள் நிரப்பப் பட்டுள்ளன. இலாகா தேர்வுகளில் SC/ST ஊழியர்களுக்கு DoP&T உத்தரவுகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் மட்டுமே தொடர்ந்து போராடி வருவது மிக முக்கியமானது. இதனை பலமுறை தேசிய கவுன்சில் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கம் எழுப்பியுள்ளது. பல போராட்டங்களையும் இதற்காக BSNL ஊழியர் சங்கம் நடத்தியுள்ளது. அதன் விளைவாக ஒரு சில முன்னேற்றங்கள் தற்போது ஏற்பட்டுள்ளது. இருந்த போதும் BSNLல் SC/ST ஊழியர்களுக்கான தளர்வுகள் தொடர்பாக DoP&Tயின் உத்தரவுகள் அமுல் படுத்தப்படவில்லை. இந்த பிரச்சனையை BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து கையிலெடுத்து போராடி வருகிறது. இந்த பிரச்சனை

தொடர்பாக NFTE சங்கத்திற்கு எந்த ஒரு சிந்தனயும் இல்லை என்பதோடு, இந்த பிரச்சனையை எந்தக் காலத்திலும் நிர்வாகத்துடன் அவர்கள் விவாதிக்கவும் இல்லை. இருந்த போதும் SC/ST ஊழியர்கள் NFTE சங்கத்திற்கு வாக்களிக்க வேண்டும் என SEWA BSNL கேட்டுக் கொண்டுள்ளது. SEWA BSNL தலைவர்களின் சுய ரூபத்தை SC/ST ஊழியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

4) தலமட்ட, மாநில மட்ட மற்றும் அகில இந்திய அளவில் உள்ள கவுன்சில்களில் SC/ST பிரதிநிதிகளை BSNL ஊழியர் சங்கம் நியமிக்கவில்லை என SEWA BSNL தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். என்ன பேசுவது என புரியாமலேயே அவர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அனைத்து மட்டங்களிலும் உள்ள கவுன்சில்களில் BSNL ஊழியர் சங்கம் SEWA BSNL தலைவர்களை பரிந்துரைத்து நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பியது. இது யாராலும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் FNTO சங்கம் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக கேரள உயர்நீதி மன்றம் கொடுத்த உத்தரவின் காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகளை மட்டுமே கவுன்சில் உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ள முடியும் என்று கூறி விட்டது. இதன் காரணமாகவே SEWA BSNL தலைவர்களை கவுன்சில் உறுப்பினர்களாக BSNL ஊழியர் சங்கம் நியமித்த போது நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மை இதுவாக இருக்கையில், SC/ST ஊழியர்களை SEWA BSNL தலைவர்கள் திசை திருப்ப பார்க்கிறார்கள்.

5) BSNL ஊழியர் சங்கத்தின் தூண்டுதல் காரணமாகவே அந்த சங்கத்தின் ஒற்றுமை குலைந்து விட்டதாக SEWA BSNL தலைவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதுவும் ஒரு அடிப்படையற்ற குற்றச்சாட்டு. அந்த அமைப்பில் உள்ள பல்வேறு குழுக்கள் இடையே ஏற்பட்டுள்ள கடும் போட்டிதான் SEWA BSNLல் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு காரணம். இதன் காரணமாகவே SEWA BSNLன் அனைத்து அகில இந்திய மாநாடுகளிலும் சிக்கல்கள் எழுகின்றன. SEWA BSNL உள்ளிட்ட வேறு எந்த ஒரு அமைப்பிற்கும் உள்ளே நடைபெறும் பிரச்சனையிலும் BSNL ஊழியர் சங்கம் என்றும் தலையிட்டது கிடையாது. இந்த உண்மை அனைத்து சாதாரண SC/ST ஊழியர்களுக்கும் தெரியும். மறுபுறம் SEWA BSNLல் தகராறு உள்ள சமயத்தில், பாட்னாவில் நடைபெற்ற NFTEயின் மத்திய செயற்குழுவில் கலந்து கொள்வதற்கு திரு N.D.ராம் அவர்களுக்கு போகவர விமான டிக்கெட்டுகள் வழங்கப்பட்டது. எனவே SEWA BSNLன் உள் விவகாரங்களில் NFTE சங்கம் தான் தலையிடுகிறது. மேலும், இது போன்ற விமான டிக்கெட்டுகளில் பயணம் செய்வது, திரு N.D.ராம் போன்றவர்களின் 'நேர்மை'க்கு உதாரணம். SC/ST ஊழியர்கள் இதனை புரிந்துள்ளார்கள்.

**BSNL ஊழியர் சங்கத்தின் மீது குற்றம் சாட்டும் SEWA BSNL தலைவர்கள், சாதாரண SC/ST ஊழியர்களின் நலன்களை உயர்த்துவதற்கு பதிலாக தங்களின் சொந்த நலனை உயர்த்துவதில் தான் அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதும் SC/ST ஊழியர்களுக்கு தெரியும்.**